உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள நிகழ்வுகளின் நவீன முறையிலான வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர் விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா T. V. வீடியோ டெக் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர் விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கூர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 11 புதன்கிழமை (25 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 59

# இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசிடம் நேர்மை எதுவும் இல்லை!

## மண்டேலா இந்தியா வருகை

புதுடில்லி, ஜன. 25
தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இந்தியாவுக்கு நான்குநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று இரவு புதுடில்லி வந்து சேர்ந்தார்.

நாளை புதுடில்லியில் நடைபெறும் இந்திய குடியரசு தின வைபவத்தில் பிரதம விருந்தினராக நெல்சன் மண்டேலா கலந்து கொள்வார். [இ]

முச்சந்தி முரளி



பேச்சுக்கள் நடக்கிற வேகத்தைப் பார்த்தால் புரியுது பாருங்கோ...!

## நவசமசமாஜக் கட்சிச் செயலர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜனவரி 25

"தமிழர்களின் தாயகக் கோரிக்கையையும், அவர்களின் சுயாட்சி அமைப்பையும், அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதையும் சந்திரிகா அரசு ஏற்காததாலேயே தமிழர்களுக்கான சரியான அரசியல் தீர்வை அவர்களால் வைக்க முடியவில்லை. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசிடம் நேர்மை இல்லை".

இப்படிக் கூறியுள்ளார் நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் போது தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்பது அரசமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்தாயகத்தில் அவர்களுக்கு முழுமையானசுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்.

அச்சுயாட்சி அரசுக்கு அவர்களின் தேவைக்கேற்ற அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

நிதி மூல வளங்களை பொறுத்தவரையிலும் தேவையான அளவு நிதி வளங்கள்

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரில் சர்வதேச செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25
சர்வதேச செய்தி ஏஜென்சிகளின் தென் கிழக்காசியச் செய்தியாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விமான மூலம் பலாலி வந்து காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலம் அவர்கள் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

வொய்ஸ் ஒவ் அமெரிக்க செய்தி நிறுவனத்தின் தெற்காசிய பிரிவு பொறுப்பாளர் திரு. மைக்கல் ரட்ஜ்—

லண்டன் ரைம்ஸ் பத்திரிகை செய்தியாளர் திரு. கிருஸ்தோபர் தோமஸ்—

ஆஸ்திரேலிய ஒலிபரப்புக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காலை படகுச்சேவை இன்று முதல் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 25
கிளாலி - பூநகரி படகுச் சேவை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 4 மணி முதல் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இன்று முதல் இந்த நேரமாற்றம் அமுலுக்கு வரும் என்றும் —

மறு அறிவித்தல் வரை இந்நேரத்திலேயே படகுச் சேவை நடைபெறும் என்றும் — அவர்கள் அறிவித்துள்ளனர். (இ–3)

## கொள்ளையர்களைத் தாக்கி விரட்டிய தமிழ் இளைஞர்!

### பாரிஸ் நகரில் சம்பவம்

பாரிஸ், ஜன. 25
பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தமிழ் வர்த்தக ஸ்தாபனங்கள் அமைந்துள்ள லா சப்பல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைமுயற்சியை தமிழ் இளைஞர்கள் முறியடித்தனர் எனத்தெரியவந்தது.

தமிழரின் வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த நான்கு கறுப்பினத்தவர்கள் அங்கு நின்ற தமிழர்களை துவக்கு முனையில் நிறுத்தி கொள்ளையிட முயன்றனர் என்றும்—

அப்போது தமிழ் இளைஞர் இருவர் அவர்களை தாக்கியதாகவும்—

துப்பாக்கி தவறி கீழே விழ கொள்ளையர்கள் காரில் தப்பிவிட்டதாகவும்— தெரிய வந்தது.

கொள்ளையர்கள் கைவிட்டுச் சென்ற துப்பாக்கி போலித் துப்பாக்கி என்று பின்னர் தெரியவந்தது. (ஒ–3)

## இராணுவத்தின் மாறான கருத்தினால் அரசாங்கத்துக்கு சங்கட நிலை!

### பேச்சை முன்னெடுப்பதில் சிக்கல்

கொழும்பு, ஜன. 25
அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட பல விடயங்களில், இராணுவம் அரசாங்கத்தின் நோக்கத்துக்கு மாறான கருத்துக்களைத் தெரிவிப்பதாகவும்,

அதனால் அரசுக்குப் பெரும் சங்கட நிலை தோன்றியுள்ளதாகவும் அரசாங்க முக்கியஸ்தர் ஒருவர் கவலை தெரிவித்ததாக "ஹிரு" சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தின் இந்த நிலைப்பாடு குறித்து அதன் மீது அரசு கடும் போக்கைக் கையாண்டால் அது அரசுக்குப் பாதகமான நிலையை உண்டாக்கும் என்று அரசியல் ஆலோசகர்கள் எடுத்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுக்கு புகழாரம் சூட்டுகிறார் பொன்சேகா!

கொழும்பு, ஜன. 25
"தங்களுடைய இலட்சியத்துக்காக உயிரை பணயமாக வைத்து செயற்படும் இளைஞர் கூட்டத்தை தனது ஆளுமையால் வெற்றி கொண்டவர் பிரபாகரன்"

இப்படிப் புகழாரம் சூட்டியுள்ளார் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகா.

ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நேரில் சந்திக்காவிட்டாலும் அவரது செயலூக்கங்களை நான் அறிந்து வைத்திருக்கிறேன்.

உலகில் நான்காவது இராணுவத்தையே வெற்றி பெற்ற பெருமை அவருக்கு உண்டு.

அவரை மையமாக வைத்து திரைப்படம் ஒன்றை நான் விரைவில் தயாரிக்க விருப்பம் கொண்டுள்ளேன்.

அவரது துணிச்சலும், எமது, ஜனாதிபதியின் துணிச்சலும் திடநம்பிக்கையும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் எங்கள் நாடு எவ்வளவு சுபீட்சம்- நிறைந்ததாக இருக்கும் என கற்பனை செய்து பார்த்தால் வளமான எதிர்காலம் கண்கூடாகத் தெரியும்.

இனப்பிரச்சினையை இனவாரியாக அணுகக்கூடாது. எல்லா உயிர்களும் விலை மதிக்க முடியாதவை. எனவே தமிழர் பிரச்சினைகளை அக்கறையோடு அணுகுவேன். அவர்களின் விடிவுக்காக உழைப்பேன் என்றார். (ஒ–3)

## சரக்குக் கப்பல்களில் தபால்பொதிகள் செல்லும்

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ் அரச அதிபரின் அனுசரணையுடன் தபால் பொதிகளை பருத்தித் துறையில் இருந்து புறப்படும் சரக்கு கப்பல்களில் கொழும்பிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தபால் பொதிகளை கப்பலில் எடுத்துச் செல்வதற்கு புதியநடைமுறையை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதனால் தபால் பொதிகள் எடுத்துச் செல்வதில் சிலகாலம் தேக்க நிலை ஏற்பட்டிருந்தது.

இதை அடுத்து யாழ் அரச அதிபரின் சிபார்சுடன் தபால் பொதிகளை அனுப்பி வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

நாளை பருத்தித்துறையில் இருந்து புறப்படும் 'கோமாரி' கப்பலில் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படவிருப்பதாக யாழ் பிரதம தபாலதிபர் திரு சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஒ–4)

## வடக்கு நிர்வாகத்தை 5 ஆண்டுகள் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும்

### யுக்திய பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஜன. 25
அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தை வெற்றி பெறுமானால் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வடக்கின் நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்ட ஒரு பகுதியினரால் அரசுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி "யுக்திய" சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடபகுதியில் மாகாண நிர்வாகம் ஏற்கனவே விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

விடுதலைப் புலிகளுடன் போட்டி போடக்கூடிய பலம் மிக்க அரசியல் அணி ஒன்று இல்லாமலிருக்கும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டே மேற்படி யோசனை முன் வைக்கப்பட்டுள்ளதாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நான்காம் கட்ட பேச்சு சனியன்று நடைபெறும்

### "ஐலண்ட்" பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜன. 25
அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுவதாக நேற்றைய "ஐலண்ட்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதற்கிடையில் —

சமாதானப் பேச்சுக்களில் இருதரப்புக்கும் இடையில் தோன்றியுள்ள வேறுபாடுகளைக் களைவதற்கு அவசர சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெறவிருப்பதாக "லங்காதீப" செய்தி வெளியிட்டிருக்கிறது.

கருத்து வேறுபாடுகளை தீர்ப்பதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மத்தியஸ்தம் வகிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## புலிகளின் பிரதிநிதிகள் பௌத்த பிக்குவுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 25
திம்புலாகல பௌத்த விகாரையின் விகாராதிபதி வண. சித்தலாகம சிலலங்கார நாயக்க தேரருடன் விடுதலைப் புலிகளின் மூன்று பிரதிநிதிகள் பேச்சு நடத்தியதாக "த சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

திம்புலாகல விகாரையில் கடந்த புதனன்று சுமார் ஒரு மணி நேரம் நல்லுறவு நிலையில் இப்பேச்சுக்கள் இடம் பெற்றன.

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு மகாசங்கத்தின் ஒத்துழைப்பை விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கோரியதாக நாயக்க தேரர் பின்னர் தெரிவித்தார்.

பொலிஸாருடனும், இராணுவத்தினருடனும் தங்களுக்கு நல்லுறவு நிலவுவதாகவும் —

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கை இருப்பதாகவும் —

அவர்கள் நாயக்க தேரரிடம் கூறியதாக "த சண்டே ரைம்ஸ்" தெரிவித்தது. [உ]

## தங்கத்துரைக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை

திருகோணமலை, ஜன. 25
திருகோணமலை தமிழர் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு தங்கத்துரையை ராஜினாமாச்செய்ய வேண்டாம் என்று கோரி அங்கு கையெழுத்து வேட்டை இடப்பெற்று வருவதாக தெரியவருகிறது.

திரு. அ. தங்கத்துரை இம் மாத இறுதியில் தமது பதவியை ராஜினாமாச் செய்து அந்தப் பதவியை திரு. இரா. சம்பந்தனுக்கு வழங்கவிருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே.

திரு அ. தங்கத் துரையை ராஜினாமாச் செய்ய கேட்கக் கூடாது என்று தலைமைப் பீடத்தை கோரும் மகஜரில் கையொப்பம் பெறும்நடவடிக்கையும் தற்சமயம் நடைபெற்று வருகிறது என்றும்

அவரின் தீவிர ஆதரவாளர்களே இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ 3)

## யுத்தம் மீதான நம்பிக்கையை அரசு முற்றாகக் கைவிட மறுக்கிறது

யாழ்ப்பாணம், ஜன 25
பூநகரி முகாமை அகற்ற ஸ்ரீலங்கா அரசு பின்னடிப்பது யுத்த நடவடிக்கைகளில் அது வைத்துள்ள நம்பிக்கையை முழுமையாக அகற்ற விரும்பாததையே காட்டுகிறது.

இப்படி "யுக்திய" சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பூநகரி – சங்குப்பிட்டி பாதையை திறப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள தேக்க நிலைக்கு இராணுவ முகாமே பிரதான காரணமாக உள்ளது என்று குறிப்பிட்ட அந்தப் பத்திரிகை, சமாதானம் ஏற்படுவதற்கு எந்த ஓர் அரசுக்கும் வழங்காத சந்தர்ப்பத்தை இன்றைய அரசுக்கு மக்கள் வழங்கியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

இதனை அரசு சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும்—

விடுதலைப் புலிகளுடன் தீர்வைக் கொண்டுவர சந்திரிகா தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றும்— அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ–3)

### தெரிவுக் குழுவுக்கு அரசு யோசனை:

## சிங்களம், தமிழ் இரண்டும் அரச கரும மொழிகள் என்று இருக்க வேண்டும்

### அரசமைப்பில் திருத்தம் தேவை

கொழும்பு, ஜன. 25
சிங்கள மொழியும் தமிழ் மொழியும் அரசகரும மொழிகளாகும் என்ற திருத்தத்தை அரசமைப்பில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று அரசு அரசமைப்புத் தொடர்பான தெரிவுக்குழுவுக்கு யோசனை தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பில் சிங்களம் அரச கரும மொழி என தனியான ஒரு வசனத்திலும் —

தமிழும் அரச கரும மொழியாகும் என இரண்டாவது வசனத்திலும் — குறிப்பிடப்பட்டுள்ளது

அரசு தெரிவுக் குழுவுக்கு தெரிவித்துள்ள திருத்த யோசனையில் —

சிங்கள மொழியும், தமிழ் மொழியும் அரச கருமமொழிகளாகும் என்று ஏக வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ–3]

## காங்கிரஸ் கட்சியிலிருந்து அர்ஜுன்சிங் இடைநிறுத்தம்

புதுடில்லி, ஜன. 25
முன்னாள் மனித வளத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் சிங் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

கட்சியின் பொதுச் செயலர் ஜனர்தனன் [illegible] இதனைத் தெரிவித்தார்.

தாம்விடுத்த [illegible] மூலம் கட்சியின் நலனுக்கு எதிராக அர்ஜுன்சிங் செயற்பட்டார் என்று அவர் மீது குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

கட்சியின் விதிமுறைகளின் படி, தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்சியின் தலைவர் நரசிம்மராவ் அவரை இடைநிறுத்தம் [illegible] விக்கப்பட்டது. ([illegible]–3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி"
17ஆவது மலர் வெளியீடு
**வெள்ளி விழா**

இடம்: கல்லூரி பிரதான மண்டபம்
காலம்: 26 — 01 — 1995 வியாழக்கிழமை காலை 11 மணி

தலைவர்: செல்வன் க. றொக்சன் ஜெ...
பிரதம விருந்தினர்: பேராசிரியர் வ. ஆறுமுகம் (தலைவர், கல்வியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்:
திரு. வெ. இளங்குமரன் (பொறுப்பாளர், தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை)
திரு. வ. தானையா (உதவிக் கல்விப் பணிப்பாளர் - நல்லூர்)
திரு. வ. க. பாலசுப்பிரமணியம் (சிறப்பு அலுவலர் - வர்த்தகம் - வலயம் - 1)
நூல் வெளியீடு: திரு. மு. இராமலிங்கம் (கல்லூரி முன்னைநாள் அதிபர்)
முதல் பிரதி பெறுபவர்:
திரு. சி. தனபாலசூரியர் (செயலாளர், பா. அ. ச.)
ஆய்வுரை: திரு. இ. நந்தகுமாரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. K.K. அருள்வேல் (சிரேஷ்ட விரிவுரையாளர். வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

★ இவ் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வர்த்தக மாணவர் மன்றம்
யா/கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்.
[34838]

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

## பிரிட்டன் தொலைக்காட்சிக்கு சந்திரிகா பேட்டி

கொழும்பு, ஜன. 25
இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச சமூகத்தினர் எந்த வகையிலாவது உதவ வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு "பிரைம் ரைம்" என்ற நிகழ்ச்சியிலேயே அவர் பேட்டியளித்திருந்தார்.

அப்பேட்டியில் அவர்மேலும் கூறியதாவது:-

'தனிநாட்டுக்கு குறைவாக எதையும் வழங்குமாறு தமிழ் மக்கள் எங்களுக்கு பொதுவாகக் கூறுகிறார்கள். சர்வதேச சமூகத்திடம் இருந்து நாம் பெறும் எந்த உதவியையும் வரவேற்கின்றோம்' என்றார்.

"மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இருக்கும் போது தங்களின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றதா? என்று செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த ஜனாதிபதி "அவ்வாறு தொடர்ச்சியான அறிக்கைகள் தரப்படுகின்றன" என்றார்.
(ஒ-3)

## சயிக்கிள்களுக்கு இலக்கத் தகடு

யாழ்ப்பாணம், ஜன. 25
பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையத்தில் வைத்து இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சைக்கிள்களுக்கு புதிய இலக்கத் தகடுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(இ-17)

## வீர வணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25
ஜனவரி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று புதன்கிழமை இரவு 7-30 மணிக்கு அல்வாய் தெற்கு டைமன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களின் கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் கூட்டத்தில் இடம் பெறும். (க)

## இலங்கை வங்கி ரூ. 15ஆயிரம் அன்பளிப்பு

வடமராட்சி, ஜன. 25
வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயத்துக்கு பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை 15 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் அதிக எண்ணிக்கையான மாணவிகள் இக்கல்லூரியிலிருந்து சேர்ந்துள்ளதால் இந்நிதி வழங்கப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. ம. சண்முகசுந்தரம் இந்நிதியை கல்லூரி அதிபரிடம் வழங்கினார்.
(க-173)

# பின்வரிசை ஆசன எம்.பிக்கள் அரசுக்கு எதிராக போர்க் கொடி

கொழும்பு, ஜன. 25
பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பின் வரிசை ஆசன எம்.பிக்கள் அரசில் தங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாததை ஆட்சேபித்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக தனி அமைப்பு ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த அமைப்புச் செயலாளராக உபாலி குணரத்னாவும், தலைவராக சமல் ராஜபக்ஷவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் நாற்பது எம்.பிக்கள் வரை இருப்பதாக "த சண்டே ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்தது.

தங்களுக்கு நிதியோ அல்லது அதிகாரமோ வழங்கப்படாததால் தங்கள் கட்சிக்காரர்களையும் ஆதரவாளர்களையும் கவனிக்க முடியாமல் இருப்பதாக அவர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அவர்கள் ஒன்று கூடி, தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் குழுவினர் கடந்த வாரம் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்ற சமயம், அந்தக் குழுவில் இடம் பெறாத அரச தரப்பு எம். பி. ஒருவர், குழுவின் தலைவரையும் செயலாளரையும் பார்த்து—

"ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டு பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களைப் ('ஜிஞ்சர் குறூப்') போல, உங்களுக்கு மத்தியிலும் "ஜிஞ்சர் குறூப்" இருக்கின்றதா?" — எனக் கேட்டார்.

"இல்லை. எங்களுக்குள் 'ஜிஞ்சர் குறூப்' இல்லை தேவையானால் "மல்பெரி குறூப்" (முசுக்கொட்டைச் செடி அணி) என்று எங்களை அழைக்கலாம்" — என சமல் ராஜபக்ஷ பதிலளித்தார்.
[உ]

## குறைகேள் அதிகாரி

கொழும்பு, ஜன. 25
புதிய குறைகேள் அதிகாரியாக (ஓம்புட்ஸ்மன்) கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் பேட்ரம் ஈ. பஸ்தியாம்பிள்ளையை ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்திருக்கிறார். (க)

## புலிகளின் குரல் வானொலியில்

25 — 01 — 1995
புதன் இரவு
★ 8-01 — குயிலோசை நிகழ்ச்சியில் ந. கோகுலன் எழுதிய "கடலோசை" கிராமிய நிகழ்வு — பகுதி 02
★ 8-20 — ஏர்முனை "கொள்கலன்களில் பயிர் வளர்க்கலாம்" சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் — கலைப்ரசன் எழுதிய 'ஏழை அழுத கண்ணீர்'
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

26 — 01 — 1995
வியாழன் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலைக் கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

புதன் மாலை
★ 5-01 சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — படப்பாடல்கள்
★ 5-30 — அறிவூற்று — நிகழ்ச்சியில் விஞ்ஞான பாடத்தின் வெப்பம் நான்காம் பகுதி —வழங்குபவர் ஆசிரியர் ஈசன் வர்த்தகம் எனும் பாடத்தில் காப்புறுதி நான்காம் பகுதி வழங்குபவர் — வினஜேஜந்திரன் ஆசிரியர்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — தொடர்ந்து உங்கள் தெரிவு
★ 6-30 — மணிக்குமாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# கொழும்புத்துறையில் மினிபஸ்- சைக்கிள் விபத்து!

## சைக்கிளில் சென்றவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 25
கொழும்புத்துறைப் பகுதியில் கணக்கர் சடைச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மினிபஸ்— சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்றவரான, பூநகரியில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்புத்துறையில் வசிக்கும் கணேசன் இலங்கேஸ்வரன் (வயது 18) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தில படுகாயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்கு உட்படுத்தியபோது உயிரிழந்தார். (ஐ-15)

# மட்டக்களப்பு பகுதியில் புலிகள் பலம் அதிகரிப்பாம்!

## கிழக்கு படை அதிகாரி அச்சம்

கொழும்பு, ஜன. 25
யுத்த இடைநிறுத்தம் வந்த பின்னர், மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பலம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவதாக கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

'திவயின' சிங்கள நாளிதழ் நேற்று இச்செய்தியை வெளியிட்டது.
(உ)

## தொழிலாளர் பற்றாக் குறையால்

# நகரில் மலத்தியோன் விசிறும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ். மாநகரப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணி மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றது.

மலத்தியோன் கையிருப்பில் இருக்கின்ற போதும், ஆட்கள் போதாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது மாநகரப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணியில் 2 மேற்பார்வையாளர்களும், 8 தொழிலாளர்களுமே தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர் பற்றாக்குறையாக இருப்பதினாலேயே மலத்தியோனை துரித கதியில் விசிற முடியாமல் இருப்பதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ஒ-17)

## 3 லட்சம் லீற்றர் டீஸல் நாசம்!

கொழும்பு, ஜன. 25
சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் மூன்று லட்சம் லீற்றருக்கும் அதிகளவு டீஸல் நாசமாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.
(உ)

## ஆஸி தமிழர் ஒன்றியம் கடிதம்

கொழும்பு, ஜன. 25
கடந்த 17 ஆண்டுகால ஆட்சியில் மலிந்து போன மரணமும் துயரமும், அதன் கோரவடுக்களும் இனியும் தொடரக்கூடாது. பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வையும், நாட்டில் நிரந்தர அமைதியையும் தோற்றுவிக்க வேண்டும். அதற்காக மக்கள் தமது ஆணையை தேர்தல் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு ஆஸ்திரேலிய தமிழர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இனவாத, மதபீட சக்திகளுக்கு அப்பாற்பட்டு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் கடந்த 17 வருட மரணம் மலிந்த ஆட்சிக்கு முற்றுப் புள்ளி இட்டு அமைதி ஏற்படுவதற்கான அறிகுறி ... தாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 25
குருநகர் றெக்கிளமேசன் கடற்கரை வீதியில் உள்ள கடற்கரைப் பாதுகாப்புச் சுவர் இராணுவத்தினரின் ஷெல் மற்றும் விமானகுண்டு வீச்சுக்களுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்துள்ளது. இந்த சேதமடைந்த சுவரைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம் மீன்பிடி நீர்வள அமைச்சர் இந்திகாகுணவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பாதிப்படைந்த சுவரின் முழு வரைபடமும் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-17)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பயிராக்கவியல்/ மிருக விஞ்ஞானம்/விவசாயப் பொருளியல்/ விவசாயப் பொறியியல்/விவசாய இரசாயனவியல்/விவசாய உயிரியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான 1994. 12. 28 ந் திகதிய விளம்பரத்திற்கு மேலதிகமாக.

இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1995. 02 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 01 24

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க
பொதுக் கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 12 - 02 - 1995 ஞாயிறு மு. ப. 10மணி

அங்கத்தவர்கள் யாவரையும் கலந்து கொள்ளும் படியும் பிரேரணைகள் ஏதும் இருந்தால் 31-1-95 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படியும் பணிவாக வேண்டுகிறோம்.

இ. இராசலிங்கம்
உப செயலாளர்
[8211]

முதல்வருட நினைவுதினம்

அமரர் பெஞ்சமின் கிறிஸ்துதாஸ் ஏபிரகாம்
BEN C DAS ABRAHAM
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், அகில இலங்கை சத்திரிய மகா சபா. அகில இலங்கை நெய்தல் மாநில சங்கம் ஆகியவற்றின் முன்னாள் செயலாளர்)

மலர்வு: 10-06-1918
மறைவு: 26-01-1994

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 26 - 01 - 95 வியாழக்கிழமை காலை 5-45 மணிக்கு யாழ். புதுமை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.
758, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
(சி-433)

10-ம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு: 27 — 07 — 1921
இறப்பு: 24 — 01 — 1985

அமரர்
வயித்திலிங்கம் பொன்னம்பலம்
(நெடுந்தீவு)

1958 ஆம் ஆண்டு குருநாகல் நகரின் வீரத்தமிழனாக விளங்கிய உங்களை எவரால் மறக்க இயலும் எந்தையே!

எங்கள் அன்புத் தந்தையே! எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து ஆண்டுகள் பத்து ஆனாலும் உங்கள் அன்பும், பாசமும் ஒருபோதும் எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய நெடுந்தீவு நெழுவினி விநாயகனை வணங்குகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
36, புறாடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(34840

கல்வியங்காடு
இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோவில்
விநாயகர் நூதனப்பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

நாளை [26-01-95] வியாழன் காலை 7-00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 9-50 மணி தொடக்கம் 10 - 20 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து உற்சவம் நடைபெறும்.

கும்பாபிஷேககுரு: சதா யோகீஸ்வரக்குருக்கள்
கும்பாபிசேக உபயம் க. இராசதுரை அவர்கள்

இங்ஙனம்
பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா
ஆலய நிர்வாகம்
சு. பாலசுப்பிரமணியஐயர்
ஆதீன கர்த்தா
[34844]

அராலி ஆவரம்பிட்டி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
தைமாத குளிர்த்தி திருவிழா

20-1-95 வெள்ளிக்கிழமை தொடக்கம் அம்பிகைக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று 28-01-95 சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனைகளும், பூசைகளும் இடம் பெற்று, அம்பிகை திருவீதியுலாவரும் காட்சியும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கலுடன் நிறைவுறும்.

மேற்படி விழாவில் அடியார்கள் கலந்துகொண்டு அம்பிகையின் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

–பரிபாலன சபையினர்.
(7874)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி மாணவன்
செல்வன்
கணேசன் இலங்கேஸ்வரன்
அவர்களின்

அகால மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
[சி/316]

கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவரான Rtr. கம்சநாதன் அவர்களின் சகோதரன்
கணேசன் இலங்கேஸ்வரன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியினை தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ். றோட்டறக்ற் கழகத்தினர்
(34841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலரி மாளிகைக் குண்டு குறித்து!

# ராணுவ நீதிமன்ற விசாரணை

## ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடு மறுசீரமைப்பு

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி தங்கியுள்ள அலரிமாளிகை வாசஸ் தலத்தில், இராணுவக் கொமாண்டோப் படைச் சிப்பாய் ஒருவரிடமிருந்து அரைக் கிலோ "வி 4" ரக பிளாஸ்டிக் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டமை குறித்து விசாரணை நடத்துவதற்கு உயர் மட்ட இராணுவ நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா அடுத்த வாரத்தில் அமைக்கவிருக்கிறார்.

இந்த விசாரணை மன்றுக்கு மேஜர் ஜெனரல் வஜிரா விஜேரத்தினா தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிளாஸ்டிக் வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய தகவல் இராணுவ உயர்பீடத்துக்குத் தெரிவிக்கப்படுவதற்கு காலதாமதமானது ஏன் என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படவிருப்பதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெடி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, ஜனாதிபதியின் செயலகம், இல்லம் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

அதனை பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேரடியாக கவனித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### பணிமனை மூடப்பட்டது

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாற்றிய ஊழியர்கள் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இத் திணைக்களத்தின் பணிமனை கடந்த முதலாம் திகதியுடன் மூடப்பட்டது.

## ஆசிரியர் இடமாற்றத்துக்கு தேசிய கொள்கைத்திட்டம்

### ஆராய அமைச்சரவை உபகுழு

கொழும்பு, ஜன. 25

ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து தேசிய கொள்கைத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

இந்த கொள்கை திட்டத்தை எவ்வாறு அமுல்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாணிப மற்றும் உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரம ரட்ண, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கா, தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் இக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

ஆசிரியர் இடமாற்றங்களில் உள்ள குளறுபடிகள், கவனயீனங்கள் ஆகியவற்றை இல்லாதொழித்து ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலேயே இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் மாகாண சபைகளின் கல்வி அமைச்சுகளுடன் தொடர்பு கொண்டு கல்வி அமைச்சின் தேசிய இடமாற்றக் கொள்கைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பார்கள். (இ)

### ரெலோவுக்கு அஞ்சி

## புளொட் எம். பிக்கு தீவிர பாதுகாப்பு!

கொழும்பு, ஜன. 25

புளொட்டின் வன்னி மாவட்ட எம். பியான பாலச்சந்திரனுக்கு "புளொட்" அமைப்பினர் தீவிர பாதுகாப்பு வழங்கி வருவதாக டி. பி. எஸ். ஜெயராஜ் 'த சண்டே லீடர்" பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

வன்னிமாவட்ட தேர்தல் முடிவுகளின்படி பாலச்சந்திரனுக்கு அடுத்தபடியாக கூடியளவு விருப்புவாக்குகளைப் பெற்றவர் 'ரெலோ' இயக்கத்தின் தலைவரான அடைக்கலநாதன் என அழைக்கப்படும் செல்வர் ஆவார்.

பாலச்சந்திரனைக் கொல்வதன் மூலம் தங்களது தலைவர் எம். பியாக முடியும் என்ற காரணத்தினால் பாலச்சந்திரனின் உயிருக்கு ரெலோவினர் குறிவைக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது. இதன் காரணமாகவே பாலச்சந்திரனுக்குத் தீவிர பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# சந்திரிகாவின் பாதுகாப்பு குறித்து ரணில் விக்கிரமசிங்கா அக்கறை!

### திருமண விருந்துபசாரத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டி. பி. விஜேதுங்கா, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் 1977 ஆம் ஆண்டு முதல் அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர்கள் ஆகியோருக்கு புதுமணத் தம்பதிகளான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் கடந்த வாரம் இரவு விருந்து ஒன்றை அளித்தனர்.

அந்த விருந்திலும் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பற்றியே பெரிதும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அலரி மாளிகை இல்லத்தில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே ஜனாதிபதியின் பாதுகாப்புப் பற்றி பலரும் பிரஸ்தாபித்தனர்.

ஜனாதிபதியிடம் அவரது பாதுகாப்பு குறித்து அதிக சிரத்தை எடுக்கும்படி ரணில் வற்புறுத்தினார்.

நாட்டுத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னரும் இலங்கை நாட்டில் மட்டும் தான் பாதுகாப்பு வட்டாரங்கள் எந்த நடவடிக்கைக்கும் ஆளாகுவதில்லை என்று அங்கு குறிப்பிட்டார் ரணில்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகஜனாதிபதிசந்திரிகா தனது அலுவலகத்தை கீழ் மாடியிலிருந்து மேல் மாடிக்கு மாற்ற வேண்டும் என ரணில் அங்கு கோரினார். அந்த யோசனையை தாம் பரிசீலிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பதிலளித்தார்.

கடந்த பெப்ரவரியில் மாகாணசபைத் தேர்தல் நடந்தபோது சந்திரிகாவுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என அப்போதைய ஐ. தே. க. அரசின் அமைச்சரவையில் வலியுறுத்தியவர் அப்போதையபிரதமர் ரணில் என்பதும்—

அதை அடுத்து சந்திரிகாவுக்கு கொமாண்டோ பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றும் குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் ஐ. தே. க. அரசு சந்திரிகாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை வாபஸ்பெற முயற்சித்த போது அதனையும் ரணில் தடுத்து நிறுத்தினார்.

பொதுத்தேர்தலில் தோல்வியுற்று அலரிமாளிகையிலிருந்து வெளியேறுகின்ற சமயத்திலும், தமக்கு அதுவரை பாதுகாப்பு வழங்கி வந்த விசேட அதிரடிப் படையினரை அழைத்து புதிய பிரதமர் சந்திரிகாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி ரணில் வலியுறுத்தினார்.

— இவ்வாறு "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது. [உ]

### கண் சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 25

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம் வசதி குறைந்தோருக்கான கண்சத்திர சிகிச்சையை ஒழுங்கு செய்யவுள்ளது.

இதற்கான ஆரம்பப் பரிசோதனை 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி முதல் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறும்.

"கற்றறக்" எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள 55 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் ஏற்கனவே பதிவு செய்தவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பட்டுக் கலந்த நூடில்ஸ் ஜப்பானில் தயாரிப்பு!

டோக்கியோ, ஜன. 25

ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் இப்பொழுது பட்டுச் சேர்க்கப்பட்ட நூடில்ஸ் தயாரித்துள்ளனர்.

திரவமாக்கப்பட்ட பட்டைக் கலந்து செய்யப்பட்ட இந்த நூடில்ஸ் வழமையான நூடில்ஸிலும் பார்க்க இனிப்பானது, போஷாக்கு சத்துமிக்கது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குத் காரணம் பட்டு புரதத்தாலானது என்பதாகும்.

பட்டு புரதத்தில் அலனின், கிளிசரின், ரைரோசின், செரீன் ஆகிய அமினோ அமிலங்கள் கூடுதலாக உண்டு. இவற்றில் செரீன் இனிப்பானது.

கொயட்டோ நகரில் உள்ள ஜப்பானியப் பட்டுப் புடைவைக் கம்பெனியின் ஆராய்ச்சியாளர்கள்கழிவு நூலை எடுத்துக் கரைத்து நூடில்ஸ், அரிசி, பிஸ்கெற்றுகள், இனிப்புகள், ஜாம், ஜெலி, பானங்கள் ஆகியவற்றில் கலக்கிறார்கள். (க)

### ஈழத்தமிழ் அறிஞர் வெளியேற்றம்:

## கனடா இந்து மன்றம் கண்டனத் தீர்மானம்

தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலநதுகொள்ளச் சென்ற ஈழத் தமிழ் அறிஞர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு கனடாவில் உள்ள இந்து கலாசார மன்றம் கண்டனம் தெரிவித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

தமிழ் நாட்டில் நடைபெறுகின்ற மாநாடுகளில் ஏற்படுத்தப்படும் அரசியல் தலையீடுகளைக் கருத்திற் கொண்டு—

இனிமேல் எந்த நாட்டில் தமிழாய்ச்சி மாநாடு நடைபெற்றாலும் அந் நாட்டு அரசின் ஆதரவை மட்டும்தான் தமிழாராய்ச்சி மன்றம் பெற வேண்டுமே தவிர, அவற்றின் தலையீடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பதை தமது அமைப்பு விதிகளில் ஒன்றாக தமிழாராய்ச்சி மன்றம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும்—

ஈழத்தமிழ் அறிஞர்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக ஆராய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ. தே. கவின் அதிருப்தி எம். பிக்கள் இன்று அரசுடன் 2 ஆம் சுற்று பேச்சு

ஐ. தே. கவில் உள்ள அதிருப்தி எம். பிக்கள் குழுவின் பிரதிநிதிக்கும், பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று ராஜகிரியவில் நடைபெறும் என "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஐ.தே கவில் உள்ள சுமார் இருபது எம். பிக்கள் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க முன் வந்திருப்பது குறித்தும்—

இது தொடர்பாக அந்த எம். பிக்களின் பிரதிநிதி ஒருவர் முக்கிய அமைச்சர் ஒருவரை நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் கடந்த 6ஆம் திகதி சந்தித்துப் பேசியது குறித்தும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

கடந்த வாரம் கொழும்பு— 7இல் உள்ள அமைச்சரின் வீட்டில் அமைச்சரைச் சந்தித்து அவருடன் அந்த எம். பி. பானம் அருந்திய போது அடுத்த சுற்றுப் பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

இன்று செவ்வாய்க்கிழமை ராஜகிரியவில் பொது நண்பர் ஒருவரின் வீட்டில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின் முன்னேற்றங்களை ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகக் கண்காணித்து வருவதாகவும் —

இரு தரப்பினருக்குமான அடுத்த சுற்றுப் பேச்சு அனேகமாக அலரி மாளிகையில் நடைபெறும் போது, அந்தப் பேச்சுக்களில் ஜனாதிபதியும் நேரடியாகக் கலந்து கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்களின் போது எதிர்காலத்தில் நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸும் இடம் பெற வேண்டும் என ஐ. தே. க. அதிருப்திக் குழுவினர் கோரியுள்ளதாகவும்—

தாங்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்குவது எப்படி என்பது தொடர்பான சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு அவரது பிரசன்னம் அவசியம் என அவர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பாப்பரசரின் விஜயத்தை குழப்பும்முயற்சி முறியடிப்பு

### அரசியல் வாதிகள் சம்பந்தம்

கொழும்பு, ஜன. 25

பாப்பரசரின் விஜய காலத்தில் நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்த இராணுவக் கப்டன் ஒருவரும் மூன்று அரசியல்வாதிகளும் மேற்கொண்ட சதிமுயற்சி முறியடிக்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சிரேஷ்ட பிரதிபொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த துப்பு ஒன்றினால் இந்த முயற்சி தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# கரவைக் கந்தசாமி படுகொலைக்கு உட்கட்சிப் பிணக்கு காரணமா?

### கட்டுரையாளர் கிளப்பும் வினா

"புளொட்" அமைப்பின் பிரதித் தலைவர் கரவை கந்தசாமி, கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்குறித்து, பல்வேறு புதிய தகவல்களை கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

"த சண்டே லீடர்" பத்திரிகையில் டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய கட்டுரையிலேயே இதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

அக்கட்டுரையில் உள்ள சில முக்கிய அம்சங்களின் தொகுப்பு இது:-

புலிகளே கரவைக் கந்தசாமியைக் கொன்றிருக்கக் கூடும் என ஓர் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கிய அரசியல் பிரமுகர் அல்லாத கரவைக் கந்தசாமியைக் கொல்வதற்குப் புலிகள் தமது சிரத்தையைச் செலவிட்டிருப்பார்களா?

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மீது கூட இன்னும் இலக்கு வைக்கப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் அரசியலில் அவர் ஒருசெல்லாக்காசாகி விட்ட சகதி என்பதே ஆகும்.

மறுபுறத்தில் ஐ. தே; க. அரசில் முக்கிய பிரமுகராக விளங்கியதால் காமினி திஸாநாயக்கா பெறுமதி மிக்க இலக்கானார்.

கொழும்பு தொடர்புச் சாதனங்களின் செய்திகளை வாசிப்போருக்கு இந்தக் கொலைக்கு பிரதான சந்தேக நபர்களாக புலிகள் தென்பட்டாலும், அது "உள்வீட்டு வேலையாக" இருக்கும் என்பதை ஒதுக்கிவிட முடியாது.

உமாமகேஸ்வரன் காலத்தில் "புளொட்" இயக்கத்துக்குள் இடம்பெற்ற — பெரும் எண்ணிக்கையான — 'உள் வீட்டுக் கொலைகளை' இச்சம்பவத்துடன் ஒப்பிட்டு தமிழ்க் கட்சிகளின் பல பிரமுகர்கள் பிரஸ்தாபிக்கிறார்கள்.

இதனை மறுத்துள்ள 'புளொட்' தலைவர் சித்தார்த்தன் இது புலிகளின் வேலை என்று குறிப்பிட்டுள்ளார்.

### முறுகல் நிலை இருந்தது

கரவை கந்தசாமியை தாங்கள் "மாமா" என்று அழைப்பதாகவும், தங்களுடன் மிக நெருக்கமான அவரை எதிரியாகக் கருதுவதற்கு தங்களுக்கு காரணம் ஏதுமில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்,

ஆனால் கந்தசாமியின் இறுதிக் காலத்தில் அவருக்கும், 'புளொட்' அமைப்புக்கும் இடையில் முறுகல் நிலை இருந்தது என்பதற்கு சான்றுகள் உள்ளன.

எனவே இக் கொலை உள்வீட்டு விவகாரமாக இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவே கருதப்படுகின்றது.

தற்போதைய ஈ.பி.டி.பி. தலைவரான டக்ளஸ் தேவானந்தா, ஈ. பி. ஆர். எல். எவ்வின் யாழ் இராணுவத் தளபதியாக இருந்தபோது ஈ. பி. ஆர். எல். எவ்வில் இருந்தவர் கரவைக் கந்தசாமி.

கந்தசாமிக்கும், டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நெருக்கம் இருந்தது ஒருபுறமிருக்க, தேவானந்தாவின் தகப்பனார் கதிரவேலும், மாமனார் கே. விநித்தியானந்தனும் கந்தசாமிக்கு மிக நெருக்கமான நண்பர்களாக இருந்தனர்.

தேவானந்தா ஈ. பி. ஆர். எல். எவ்வை விட்டு விலகிய பின், இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கரவைக் கந்தசாமியும் ஈ. பி. ஆர். எல். எவ்வை விட்டு விலகி, புளொட்டில் சேர்ந்தார்.

### வன்னியில் போட்டியிட விரும்பினார்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புளொட்டுக்கு அதிக வெற்றி வாய்ப்புள்ள வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட கரவைக் கந்தசாமி விரும்பினார். ஆனால் "புளொட்" தலைவர் சித்தார்த்தன் அவரை அங்கு போட்டியிட விடாமல் யாழ்ப்பாணத்தில் நிறுத்தினார்; அங்கு அவர் தோல்வியுற்றார்

இதனாலும்—

பின்னர் கட்சி அலுவலகத்துக்குள் வைத்து புளொட்டின் இராணுவப் பிரிவுத் தலைவரான மாணிக்கம் தாசனினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையும் அடுத்து -

### ஈ. பி. டி. பியில் சேர இருந்தார்

மனவிசனமடைந்திருந்த கந்தசாமி புளொட்டை விட்டு விலகி, ஜனவரி முதலாம் திகதியன்று தனக்கு முன்னரே நெருக்கமானவரான டக்ளஸின் தலைமையில் இருக்கும் ஈ. பி. டி. பியில் சேர முடிவு செய்தார்.

அதற்கு எதிராக கந்தசாமிக்கு பல மிரட்டல்கள் வந்தன. உயர்மட்ட 'புளொட்' தலைவர் ஒருவர் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஈ. பி. டி. பியில் சேர்ந்தால் விளைவுகளை எதிர்கொள்ளவேண்டி வரும் என மிரட்டினார். ஆனால் கந்தசாமி புதுவருடத்தன்று ஈ. பி. டி. பியில் சேரும் தமது முடிவை மாற்றவில்லை.

கடைசி முயற்சியாக, புளொட் [illegible] டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு கந்தசாமியை எடுக்க வேண்டாம் எனக் கோரினர். ஆனால் கந்தசாமி தங்களுடன் சேர விரும்பினால் அதை மறுக்க முடியாது என டக்ளஸ் தேவானந்தா கூறிவிட்டார்.

சம்பவம் நடந்த அன்று கரவை கந்தசாமி தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் எம் சிவசிதம்பரத்துடன் நீண்ட நேரம் கலந்தாலோசனை செய்தார். பின்னர் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

### உள்வீட்டு வேலை

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது இது உள்வீட்டு வேலை என்பதை நிராகரித்து விட முடியாது.

இது தவிர வெளிநாடுகளில் தற்போது வதியும் புளொட்டின் முன்னாள் உறுப்பினர்கள் பழிவாங்கும் நோக்கில் கொல்லப்பட்டு வரும் சம்பவங்களும் கவனிக்கத்தக்கது.

புளொட்டின் முன்னாள் உறுப்பினரான — அச்சுவேலியைச் சேர்ந்த— ஐயாத்துரை உதயகுமாரும் (வயது 28) அவரது மனைவி கிரிஜா உதயகுமாரும் (வயது 24) கடந்த டிசம்பர் 7ஆம் திகதி சுவிச்சர்லாந்தில் கொல்லப்பட்டதும் இந்தக் காரணத்துக்காகத்தான் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (உ)

## ஹமில்டன் வனசிங்கா அடுத்தமாதம் ஓய்வு!

### சந்திரானந்த டி சில்வா நியமனம்?

கொழும்பு, ஜன. 25

பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அடுத்த மாதம் ஒய்வு பெறுவார் என்றும்—

அவரது இடத்துக்கு சிவிலியன் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பதவிக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த சில்வா. அதனை ஏற்க மறுத்து விட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும்—

அவரது பெயரே இப்போதும் இப்பதவிக்கு அடிபடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## வேலை நிறுத்தத்தால் கண்டி நகரில் மின் தடை!

கண்டி மாநகரசபை மின்சார ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக நகரின் முக்கிய பகுதிகளில் மின்தடை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது

சபையின் கீழ் பணியாற்றும் தற்காலிக ஊழியர்கள் 40 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். (உ)

## மார்ச் மாதம் 27 ஆம் திகதி இலவச சீருடை விநியோகம்

நாட்டில் உள்ள 43 லட்சம் மாணவருக்கும் இலவச சீருடைத் துணிகளும் —

பிரிவினா பிக்குகளுக்கு அங்கிகளும் —

வழங்கும் உத்தியோக பூர்வ வைபவம் எதிர்வரும் மார்ச் 27ஆம் திகதியன்று நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

பிரதான உத்தியோக பூர்வ வைபவம் இரத்தினபுரி பாடசாலை ஒன்றில் நடைபெறவுள்ளது.

சீருடைத் துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக 48 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது என்றும் —

சீருடைத்துணிகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் —

சீருடைத்துணி விநியோகத்தில் மோசடிகளைத் தடுப்பதற்காக ஒரே நாளில் மாணவர்களுக்கு அவற்றை விநியோகிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கங்கேரியன் சில்க்கிப் பிராமா குஞ்சுகள், அடை முட்டை, கோழி, விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு: த முத்தையா, 185, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [8207]

### தேவை

அப்பம், ரொட்டி மற்றும் போளி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி அன் கூல்பார், 324, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி-312)

எமது இரு குழந்தைகளை முழுநேரம் பராமரிப்பதற்கு உடனடியாக வீட்டுப்பணிப் பெண் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும். தொடர்பு: 56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34834)

### O/L MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (8208)

### தவறிவிட்டது

22-1-95 அன்று மருதனார் மடம் உடுவில் வீதியில் ஒரு தொகைப் பணமும் 687181867V இலக்கமுடைய அடையாள அட்டையும் கைப்பையோடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கலையரசி நடராஜா, அங்களப்பாய், இணுவில் கிழக்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [7870]

### சிரட்டைக்கரி

தொழில் நுட்பமுறையிலான சிரட்டைக்கரி இலகுவாக சேதமின்றி சிரட்டைக்கரியை உற்பத்திசெய்ய நவீன தொழில்நுட்ப அமைப்புக்களைப் பெற இன்றே நாடுங்கள்: சக்திப் பகுதி, முதன்மைச் செயலகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி. (சி-424)

### மாறிவிட்டது

கடந்த 17ஆம் திகதி யாழ். நகரில் கபிலா காலணியகம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த ஹீரோ சைக்கிள் ஒன்று மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாற்றி எடுத்துச் சென்ற சைக்கிளை ஒப்படைத்து தமது றோமா சைக்கிளை பெற்றுக்கொள்ளுமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம் கபிலா காலணியகம் 4, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி, யாழ்ப்பாணம். (சி-315)

## தமிழ், முஸ்லிம் குழுக்களுடனும் பேசப்படும்

கொழும்பு, ஜன. 25

புதிய அரசமைப்புக்கான நகல் சட்டத்தை கடந்த திங்களன்று வெளியிட்ட நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ்—

புதிய அரசமைப்பில் இடம் பெற வேண்டிய அதிகாரப் பரவலாக்கல் குறித்து முடிவு செய்வதற்காக விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ், முஸ்லிம் குழுக்களுடனும் பேச்சு நடத்தப்படும் எனத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. (உ)

## மத்திய ஜப்பானில் மீண்டும் பூமி அதிர்ச்சி

லண்டன், ஜன. 25

கடந்த வாரம் பூமியதிர்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஜப்பானின் கொப்பே நகரில்—சரியாக ஆறு நாட்கள் கழித்து— நேற்று முன்தினம் மீண்டும் மூன்று தடவைகள் பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டன.

இதனால் ஏற்கனவே பூமியதிர்ச்சியால் சேதமுற்றிருந்த கட்டடங்கள் அசைந்தன; அவை சரிந்து விழக்கூடும் என அஞ்சப்பட்டது.

கடந்த வாரம் செவ்வாயன்று 7.8 றிக்டர் அளவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் இறந்தோர் எண்ணிக்கை 5 ஆயிரமாக அதிகரித்துள்ளது; 26 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

நேற்று முன்தினம் 4.2, 4.3, 4.8 றிக்டர் அளவுகளில் மிதமான பூமியதிர்ச்சி அங்கு ஏற்பட்டது.

இவற்றுக்கு மத்தியில்—

நேற்று முன்தினம் கொப்பே நகரில் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. இதனாலும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியதாலும் வீதிகளில் பெரும் நெருக்கடி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பூமியதிர்ச்சிகளினால் ஏற்பட்ட சேதம் பல்லாயிரக்கணக்கான கோடியென்களைத் தாண்டும் என கொப்பே நகர மேயர் தெரிவித்தார். (உ)

### 5ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருமேனி ஐயாத்துரை**

தோற்றம்: 02 — 12 — 1911
மறைவு: 25 — 01 — 1990
திதி: 30 — 01 — 1995

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கணேசபதி
கந்தையா வீதி,
சாவகச்சேரி. [34812]

---

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11-02-1995ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, தயவு செய்து பெற்றோர்கள் யாவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி ச. ஜெயராஜா
அதிபர்.

[சி/430]

---

## நில அளவையாளர்களின் கவனத்திற்கு

1) 04-01-1995 ஆம் திகதிய உதயன், ஈழநாதம் பத்திரிகைகளில் பிரசுரமாகிய "நில அளவையாளர்களுக்கான அறிவித்தலில்" உள்ளவாறு தமிழீழத்தில் நில அளவை மேற்கொள்ள விரும்பும் நில அளவையாளர்களுக்கு 1995ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கும் கடைசித் திகதி 31-01-1995 என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம். இத் திகதியின் பின்னர் விண்ணப்பிப்போர் மேலதிக கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
2) தமிழீழ நீதிமன்ற ஆணைக்குட்பட்ட நில அளவை வேலைகள் தவிர்ந்த வேறு எந்த ஒரு காணியையும் எமது முன் அனுமதி இன்றி அளப்பனவு செய்பவர்களுக்கும் அதற்கு உடந்தையாய் இருப்பவர்களுக்கும் எதிராக தமிழீழ காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பர் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.
3) இனப்பிரச்சினை காரணமாக வேலையிழந்த அல்லது பாதிக்கப்பட்ட நில அளவையாளரின் அனுமதிக்கான விண்ணப்பங்கள் தனித்தனியே பரிசீலிக்கப்பட்டு தகைமைக்கேற்றவாறு அனுமதி வழங்கப்படும்.

நிர்வாகம்,
நில அளவைப் பிரிவு,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

[சி-426]

---

யாழ்ப்பாண
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

## உயர்பிரிவு பயிற்சிநெறி - 1995

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்ப திகதி 03-02-1995 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அ] பணியாளர்களுக்கான கல்வித் தகைமைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆ] வர்த்தக பிரிவில் 3பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்த வெளிவாரி மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

-அதிபர்.

14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/423)

---

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடம்

கீழ் காண் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. காவலாளி சம்பளத் திட்டம் — 165/88 - 17
   வயது எல்லை 25 — 40
2. தொழிலாளி சம்பளத் திட்டம் — 165/88 - 17
   வயது எல்லை 25 — 40
   கூட்டுறவு பணியாளர் ஆணைக் குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைவான படிகளும் வழங்கப்படும்.
3. பால் விநியோகஸ்தர் (பயிலுனர்கள்)
   (நாளாந்தம் ரூபா 60/- பயிலுனர் படியாக வழங்கப்படும்)

விண்ணப்பதாரிகள் 06 - 02 - 1995 ஆம் திகதிக்கு பிந்தாமல் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் "பதவியின் பெயர்" குறிப்பிடல் வேண்டும்.

– பொது முகாமையாளர்.

[சி-429]

---

யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
சர்வதேச றோட்டறியின்
**90 ஆம் ஆண்டு நிறைவு**
**தமிழ்/ஆங்கிலப்**

## பேச்சுப் போட்டி

சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக் கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்புகள்:**

தமிழ்

1. மற்றவர்களுக்காகவும் வாழ்வோம்
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. தமிழிலக்கியங்களில் ஏலவே பொதிந்துள்ள றோட்டறியின் நோக்கங்கள்

ஆங்கிலம்

1. Live, Let Live,
2. Unity is Strength
3. Need for International Friendship

**போட்டி விதிகள்:**

14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

கீழே காட்டப்பட்ட மாதிரியில் அமைக்கப்பட்ட விண்ணப்பத்தை தயாரித்து உரியவாறு பூர்த்திசெய்து தாம் பயிலும் பாடசாலையின் அதிபர் அல்லது உப அதிபரைக் கொண்டு உறுதிப் படுத்தி, கீழ்க்கண்ட முகவரிக்கு இம் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் "சர்வதேச றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி" / "Oratorical Contest for the 90th Anniversary of Rotary International" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பேச்சுக்கான நேரம் 5 முதல் 7 நிமிடங்களாகும்.

தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

சர்வதேச றோட்டறியின்
90ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி

முழுப் பெயர்: ...........................
பிறந்த திகதி: .................. பால்: ..............
பாடசாலை: .................. தரம்: ..............
வதிவிட முகவரி: ...........................
பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மொழி: ..........................

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**உறுதிப்படுத்துதல்:**

இவ்விண்ணப்பதாரியினால் மேலே தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி செய்கிறேன்.

.................... ....................
கையொப்பம் திகதி

அதிபர் / உப அதிபர்
..............................
..............................

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-420)

---

## பணிநிலை வெற்றிடம்

1. **கணக்கு லிகிதர்**
   ஆகக் குறைந்தது க. பொ. த. (உ த) பரீட்சையில் கணக்கியல் சித்தி எய்தியிருக்க வேண்டும்
2. **களஞ்சியப் பொறுப்பாளர்**
   இரண்டு வருடங்களுக்கு மேல் பொறியியல் துறை சார்ந்த பொருள்கள் கொண்ட களஞ்சியத்தில் பொறுப்பாளராக கடமையாற்றியிருக்க வேண்டும்.

தகைமை உள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்,
விளம்பரதாரர் ;-

கைத்தொழில் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி, (சி-425)

---

## குருநகர் புதுமை மாதா ஆலயம் நவநாள் திருவிழாக்கள்

# கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பம்

★ **25 - 01 - 1995** இன்று புதன்கிழமை — அதிகாலை 5-45 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து கொடி ஏற்றல் வைபவம் இடம் பெறும்.

★ **01 - 02 - 1995** வரை — தினமும் காலை 5-45 மணிக்கு திருப்பலியும் மாலை 5 மணிக்கு நவநாள் ஆராதனைகளும் நடைபெறும்.

★ **02 - 02 - 1995** வியாழக்கிழமை — இறைவனை மரியாள் காணிக்கை கொடுத்த திருவிழா, திருப்பலியும், மெழுகுவர்த்தி ஆசீர்வதித்தலும். மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் - பவனியும் இடம்பெறும்.

★ **03 - 02 - 1995** வெள்ளிக்கிழமை — புதுமை மாதா வருடாந்த திருநாள். அதிகாலை 5-45 மணிக்கு முதல் திருப்பலி. காலை 6-30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் - திருச்சொரூப பவனியும், அன்னையின் ஆசீரும் வழங்கப்பெறும்.

மறையுரைகளை
அருட்திரு மரிய செபஸ்ரியன் (அ.ம.தி.)
வழங்குவார்கள்

– பங்குத் தந்தை.

சிறப்புற வாழ்த்துபவர்:

ச. சவிரிமுத்து
அழகுமாடம்
73, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

[சி-314]

---

## கல்வியின் கருவூலம் மட்டுமல்ல; பண்பின் விளைநிலமும் இதுதான்!

O/L
க.பொ.த சாதாரணதரம்
பகல்/முழுநேரவகுப்பு
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: **27-01-1995** காலை **8.30** மணி

(சி/419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## வாய்ப்பை தவறவிடும் அரசு

புதிய அரசமைப்புக்கான நகல் திட்டத்தை நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் நேற்று முன்தினம் பகிரங்கப் படுத்தினார். இந்த நகல் திட்டம் ஏற்கனவே கடந்த வாரத்தில் புதிய அரசமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்பது சந்திரிகா அரசாங்கத்தின் பிரதான கொள்கைகளில் ஒன்று. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இதற்கான ஆணையையும் அது மக்களிடம் இருந்து பெற்றுவிட்டது. அது மட்டுமன்றி இந்த வருடம் ஜூலை மாதத்துக்கு முன்பதாக அரசமைப்பை மாற்றிவிடுவது என்றும் அரசு கால அட்டவணை வகுத்திருக்கிறது.

ஆகையால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை விட, அரசமைப்பை மாற்றுவதில் அரசு அவசரம் காட்டுவதைக் காணமுடிகிறது.

எப்படியோ, புதிய நகல் திட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் சேர்க்கப்படவில்லை; விடுபட்டுள்ளன. ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி சமஷ்டி அல்லது கூட்டாட்சி ஆட்சி முறையைக் கொண்டு வருவது குறித்து நகல் திட்டத்தில் எதுவுமே பிரஸ்தாபிக்கப்படவில்லை. விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றுவதற்கான ஆலோசனையும் அதில் இல்லை.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டு கொண்டு, அந்தத் தீர்வை உள்ளடக்கும் விதத்தில் அரசமைப்பை மாற்றுவது தான் உகந்தது.

ஆனால் அரசாங்கம் ஒழுங்குமாறிச் செயற்படுகிறது. அரசமைப்பு மாற்றத்துக்கு முதலிடம் கொடுக்க விரும்பும் அரசு, அதனைச் சரிவரச் செய்வதன் மூலமாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு வழி செய்யலாம்.

அதாவது, இப்போது வெளியிடப்பட்டுள்ள, சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பு நகல் சட்டத்தில், ஆகக் குறைந்தது சமஷ்டி ஆட்சி முறையை ஓர் அடிப்படையாகச் சேர்த்திருக்கலாம். இது குறித்து அரசாங்கம் அச்சப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சமஷ்டி முறைக்குக் குறைந்த ஒரு திட்டத்தினால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது இப்போது பொதுவாகவே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகிவிட்டது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே அதனைப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

எனவே, அரசமைப்புத் திருத்த நகல் திட்டத்தில் சமஷ்டி அரசு முறையையும் அரசு சேர்த்திருக்க வேண்டும்.

அரசமைப்புத் திட்ட மாற்றத்தினை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஆதரிப்பதற்குத் தூண்டும் துரும்புச் சீட்டு ஒன்றை (முன்னாள் அரசின் நடவடிக்கைகளை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு) கையில் வைத்திருக்கும் அரசு, சமஷ்டி முறையை நகல் திட்டத்தில் சேர்ந்திருந்தால், அதனை ஐ.தே.கவும் ஏற்க நிறைய வாய்ப்புண்டு.

சமஷ்டி ஆட்சித் தீர்வை அரசாங்கம் முன்வைத்தால், தாம் அதனை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியதையும் கருத்தில் எடுத்திருக்கலாம்.

அரசமைப்பு மாற்றத்துடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஓர் அத்திவாரத்தைப் போடுவதற்கு கிடைத்த பொன்னான வாய்ப்பை அரசு தவறவிட்டு விட்டது.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு, சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வருவதனை அது விரும்பவில்லையோ என்ற சந்தேகத்தை இயல்பாகவே எழுப்புகிறது. விடுதலைப் புலிகளுடன்பேசி, தீர்வு ஒன்றை எட்டிய பின்னர் அரசமைப்பில் அது சேர்க்கப்படும் என்ற நிலைப்பாடு, அரசின் நேர்மையையும், அக்கறையையும் கேள்விக்குரியதாக்குகிறது.

# அரசமைப்பு மாற்றத்துக்கு ஐ. தே. கவின் ஆதரவைப் பெறும் தந்திரமே ஆணைக்குழு!

கொழும்பு, ஜன, 25

உத்தேச அரசமைப்புச் சட்ட நகலை நாடாளுமன்றத்தில் உரியபெரும்பான்மையுடன் நிறைவேற்றச் செய்யும் முயற்சிக்கு ஆதரவளிக்க ஐ. தே. கவை நிர்ப்பந்தப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே—

விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்து, முன்னைய அரசின் கால நடவடிக்கைகளை விசாரிக்கப்போவதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு அறிவித்திருக்கிறது.

—இவ்வாறு அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

அரசமைப்பை மாற்றி அமைப்பதாயின் பொ. ஐ. மு. அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்பதும்—

ஐ. தே. க. தவிர்ந்த— இ. தொ. க மற்றும் ஏனைய அனைத்து எதிர்க்கட்சிகளும் அரசுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்தாலகூட, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அரசினால் பெற்றுக்கொள்ள முடியாது; ஐ தே கவில் உள்ள— குறைந்தது பதின்மூன்று— எம் பிக்களின் ஆதரவு அரசுக்குத் தேவைப்படும்.

ஐ தே க தலைமைப் பீடத்துக்கு நெருக்குதல் கொடுப்பதன் மூலம், அரசமைப்பு மாற்றத்தை ஆதரிபதற்கு ஐ. தே கவை இணங்க வைக்கலாம் என அரசுத் தலைமைப் பீடம் கருதுவதாகத் தெரிகிறது.

நியமிக்கப்படவிருக்கும் உத்தேச ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த அரசின் காலங்களில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், மோசடி, ஒழுங்கீனங்கள் ஆகியவை குறித்து விசாரணை நடத்தும் என அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இத்தகைய நடவடிக்கை ஐ தே, க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா உட்பட கட்சியின் உயர்பீடத்தவர்கள் பலரையும், எம். பிக்கள் பலரையும் பெரும் சங்கடத்தில் ஆழ்த்தப்போகிறது.

ஐ. தே. கட்சி எம். பிக்களின் கடந்த கால செயற்பாடுகள் விசாரணை மூலம் பகிரங்கப்படுத்தப்படும் என்பதோடு, அதன் மூலம் கட்சிக்கும் அவர்களுக்கும் அபகீர்த்தியும் ஏற்படும்.

அத்துடன் ஆணைக்குழுவின் விசாரணையில் குற்றவாளியாகக் காணப்படின், அத்தகையோர் குடியியல் தகுதியையும், அதன் மூலம் எம். பி. பதவியையும் இழக்கும் நிலைக்கும் ஆளாக நேரிடலாம்.

இத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவை இயங்காமல் தடுப்பது தான்.

ஆனால்—

தற்போதை அரசமைப்பு சட்டம் அத்தகைய ஆணைக் குழுக்களை நியமிக்கவும், விசாரணைகளுக்கு உத்தரவிடவும் நிறைவேற்று ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.

எனவே—

விசேட ஜனாதிபதி ஆணைக் குழு முறையை ஒழிப்பதாயின் அதற்கு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதாயின்— நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையைநீக்கிநாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடிய பிரதமர் ஆட்சி முறைக்கு வழி செய்யும்— புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரவேண்டும்.

இந்தக்காரணங்களினால்— விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை எவ்வளவு வேகமாகத் தள்ளிப்போட வேண்டுமோ, அவ்வளவு வேகமாக புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வருவது பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. காவுக்கு அவசியமாகின்றது.

இவ்வாறு அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிய அரசமைப்புக்கான நகல் சட்டத்தை வெயிடுவதற்கு சில தினங்களுக்கு முன்னரே, விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுவது பற்றிய அறிவிப்பை நீதி, அரசமைப்பு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வெகுதந்திரமாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. தே. கவின் கடந்த கால ஆட்சி குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் மூலம் விசாரணை நடத்துவதில் அதிக நாட்டம் காட்டாத பொ. ஐ. மு. அரசுத் தலைமைப்பீடம், திடீரென விசாரணைக்குழு பற்றி பிரஸ்தாபிக்கத் தொடங்கியமை அரசமைப்புத் திருத்தத்துக்கு ஐ தே. கட்சி எம். பிக்களின் ஆதரவைப் பெறத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (உ)

# அரசமைப்பு திருத்த நகல் குறித்து ஐ. தே. கட்சியினர் கூடி ஆராய்வர்

### விளக்கமளிக்க ஜே. ஆருக்கும், பீரிஸுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜன. 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சமர்ப்பித்துள்ள அரசமைப்புச் சட்டத் திருத்த நகல் குறித்து கலந்துரையாடல்களை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி முடிவு செய்திருக்கிறது.

கட்சியின் நிறைவேற்றுக்குழு இவ்வாறு முடிவு செய்திருப்பதாக சட்சிப் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்திருக்கிறார்.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசமைப்பின் சில விடயங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸுக்கும் அழைப்பு விடுப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் காமினி அத்துக்கோறளை குறிப்பிட்டார். (ஐ-உ)

# ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்?

### 'சண்டே லீடர்' தகவல்

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதை ஐ. தே. க. ஆதரிக்கும் என்று தெரியவருவதாக 'த சண்டே லீடர்'' குறிப்பிட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து ஜனாதிபதி சந்திரிகாவை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பது குறித்து கட்சித் தவிசாளர் ஏ. ஸி. எஸ். ஹமீத் மற்றும் முக்கியபிரமுகர்களான நந்தா மத்தியூ, விஜேபால மெண்டிஸ், பி. தயாரத்ன ஆகியோர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டனர்.

நீதி, அரசமைப்பு அமைச்சர் ஜி. எல் பீரிஸ் உத்தேச அரசமைப்பு மாற்றங்கள் குறித்து கடந்த வாரம் ஏ. ஸி. எஸ். ஹமீத்துடன் கலந்தாலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது

# புலிகளுடன் பேச்சு நடத்தும் குழுவில் எதிரணியினரும் இடம்பெற வேண்டும்

### மேயர் கணேசலிங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 25

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் அரசுத் தரப்புக் குழுவில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

— இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் கொழும்பு மாநகரப் பதில் மேயரும், ஐ.தே.கவின் பொருளாளருமான கே. கணேசலிங்கம்.

வலிமை மிக்க எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இது விடயத்தில் ஆலோசனை கலக்கப்பட வேண்டும்; சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்ற ஐ தே. கவுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். — என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பொ. ஐ. முன்னணி எதிரணியிலிருந்த போது, தேசியப் பிரச்சினைகளை எதிர்க் கட்சிகளுடன் பகிர்ந்து கொள்வதில் தவறிவிட்டதாக ஐ.தே. க. மீது குற்றம் சுமர்த்தி வந்ததை அவர் சுட்டிக் காட்டினார்.

ஐ தே. கவும் — பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் ஒன்றிணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்தால் அது விடுதலைப்புலிகளுக்கு கணிசமான ஒரு யோசனையாக அமையும்.

சமாதானப் பேச்சுக்களில் பங்கு பற்றும் ஐ.தே. கவினர் கட்டாயமாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதோரும் பங்கு பற்றலாம் — ஆனால் எதிர்க்கட்சிகளும் பங்கு பற்றுகின்றன என்பது தான் முக்கியம் — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

# எம். பிக்களின் பாவனைக்காக "பஜிரோ இன்டர்கூலர்ஸ்" வாகனம்

### வரியின்றி இறக்குமதி செய்ய அரசு அனுமதி

கொழும்பு, ஜன. 25

அரசியல்வாதிகளுக்கு ஆடம்பரக் கார்களை வழங்குவதில் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு, தற்போது எம். பிக்கள் ஒவ்வொருவருக்கும் ''பஜிரோ இன்டர் கூலர்ஸ்'' வாகனங்களை வரியின்றி இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்திருக்கிறது.

இதன்படி —

சுமார் 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபா (26 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்) பெறுமதியுடைய ஒரு ''பஜிரோவை'' இரண்டு லட்சத்து 33 ஆயிரம் ரூபாவுக்கு எம். பி. ஒருவர் கொள்வனவு செய்ய முடியும்.

இந்தப் பணத்தையும் அவர் உடனடியாகச் செலுத்த வேண்டியிருக்காது.

''பஜிரோவுக்கான'' கட்டணத்தை அரசு செலுத்தும். பின்னர் மாதாமாதம் எம். பியின் சம்பளத்திலிருந்து நான்காயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 33 ஆயிரம் ரூபாவை அரசு கழித்து எடுத்துக் கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

23 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் விலைக்கு உட்பட்ட பெறுமதியுடைய 2,000 ஸி. ஸி. பெற்றோல் வாகனத்தை அல்லது 2,800 ஸி ஸி. டீசல் வாகனத்தை வரிவிதிப்பின்றி கொள்வனவு செய்யவே முன்னர் எம். பிக்களுக்கு அரசு அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் பின்னர் எம். பிக்கள் ''பஜிரோ வாகனம் வாங்குவதற்கு வசதியாக இந்த உச்ச எல்லை 26 ஆயிரத்து 500 டொலராக தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# எய்ட்ஸ் நோய் தடுப்பு பற்றி டில்லியில் சொய்ஸா பேச்சு

இந்தியா சென்றிருக்கும் விஞ்ஞான, தொழில்நுட்ப, மனிதசக்திவள அமைச்சர் பேர்னாட் சொய்ஸா புதுடில்லியில் இந்திய கைத்தொழில் இணை அமைச்சர் புவனேஸ்வர் சதுர்வேதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

காற்றழுத்த சக்தி, சூரிய சக்தி ஆகியவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான தொழில் நுட்பம் குறித்தும், எய்ட்ஸ் நோய் தடுப்புக்கான வழிவகைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# மேலும் ஈழ அகதிகள் தாயகம் திரும்புவர்

சென்னை, ஜன. 25

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் தங்கியிருக்கும் சுமார் 4 ஆயிரத்து 500 ஈழத் தமிழ் அகதிகளில், இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புவோரை திருப்பி அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் செய்[illegible] தாக இராமநாதபுரம் கலெக்டர் என். [illegible] வித்துள்ளார். [உ]

### படையினர் கடும் எதிர்ப்பு!

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது என விடுதலைப் புலிகள் எடுத்ததாகக் கூறப்படும் முடிவை அரசபடையினர் கடுமையாக எதிர்ப்பதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது. (உ)

### ஐ தே. க. எம்.பி வழக்குத்தாக்கல்

கொழும்பு பிரிமா பேக்கறி வேலை நிறுத்தம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட— ஐ. தே. கவின் எம். பியான— ரஜித சேனரத்ன அச்சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை நேற்று தாக்கல் செய்தார். (உ)

### சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 25

பாஷையூர்ப் பகுதி தாய்மாருக்கான சுகாதார கருத்[illegible] பிற்பகல் 3 மணிக்கு பாஷை[illegible] நிலையத்தில் நடைபெறும். [க-17]

### அலரி மாளிகையில் நீண்ட நாள் இருந்த குண்டு!

அலரி மாளிகையில் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் வெடி மருந்துகள், கடந்த ஜூன் மாதம் முதல் அங்கிருந்திருப்பதாகத் தெரியவருகின்றது என்று ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

# பிரமுகரை கண்டுபிடிக்க ரூபா 10லட்சம் சன்மானம்!

### பாததும்பறையில் விநோத போஸ்டர்

கொழும்பு, ஜன 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் உள்ள எம். பிக்கள், தமது அரசின் அமைச்சர்களைத் தாங்கள் சந்திக்க முடியாமல் இருப்பதாக முறைப்பாடு செய்வது ஒரு புறமிருக்க —

பாததும்பறைப் பிரதேசத்தில் விநோதமான சுவரொட்டிகள் பல கடந்த வாரம் ஒட்டப்பட்டிருந்தன.

அந்தப் பிரதேசத்தின் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவரைக் கண்டு பிடிப்பவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்னொரு சுவரொட்டியில் அந்த அரசியல் வாதி அந்தப் பக்கம் வந்ததை ஆதாரத்துடன் யாரேனும் நிரூபிப்பார்களேயானால் பெரிய தொகை சன்மானமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது (உ)

# ஐ.தே. கவுக்குப் புதிதாக எட்டுச் செயலாளர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது முன்னைய முடிவுகள் சிலவற்றை மாற்றியிருக்கின்றார்.

மாகாண முதலமைச்சர்களான டயிள்யூ எம் பி. திஸநாயக்கா, பேர்ஸ சமரவீர, ஜி மகிந்தசோம, பி. பொடி நிலமே ஆகியோரையும், தென்மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரான எம். எஸ். அமரசிறியையும் கட்சியின் ஐந்து புதிய உதவிச் செயலாளர்களாக நியமிக்க ரணில் விக்கிரமசிங்க முன்னர் முடிவு செய்திருந்தார்.

ஆனால் உதவிச் செயலாளர்களை நியமிப்பதில்லை என்றும் —

கட்சிக்குப் புதிதாக எட்டு செயலாளர்களை நியமிப்பது என்றும் —

கட்சி முடிவு செய்திருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# நிர்வாக சேவைக்கு 108 பேர் தெரிவு

### தமிழர்கள் 13 பேர் மட்டுமே

கொழும்பு, ஜன. 25

இலங்கை நிர்வாக சேவைக்கு 13 தமிழர்கள் உட்பட 108 பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஸ்ரீலங்கா நிர்வாக சேவை பயிற்சி நிலையத்தில் இவர்களுக்கான பயிற்சி வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### புத்தர் சிலையில் அமர்ந்த விவகாரம்

# பி.பி.ஸி செய்தியாளர் மன்னிப்புக் கோரினார்

கொழும்பு, ஜன. 25

திக்குவெல்லப் பகுதியில் உள்ள பௌத்த வணக்கஸ்தலம் ஒன்றின் புத்தர் சிலையில் அமர்ந்ததாகக் கூறப்படும் ஒரு சம்பவம் குறித்து பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னியும் அவரது சகாவும் பகிரங்க மன்னிப்புக் கோரியிருக்கின்றனர்.

பௌத்த ஆலயத்தை மாசுபடுத்தும் விதத்திலும் பௌத்த மக்களின் மனதைப் புண்படுத்தும் விதத்திலும் தாங்கள் நடந்து கொண்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டது தெரிந்ததே. [உ]

# உள்ளூராட்சி தேர்தலில் சிறிசேன கூரே போட்டி

கொழும்பு, ஜன. 25

இந்தியாவில் யாத்திரை மேற்கொண்டு வரும் சிறிசேன கூரே நாடு திரும்பி, மீண்டும் அரசியலில் ஈடுபடுவார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மிக விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின் போது கொழும்பு மாநகரசபைக்கு ஐ. தே. க. பட்டியலில் அவர் போட்டியிடுவார் என்றும்—

அவரே கட்சியின் சார்பில் மேயர் பதவிக்கு நிறுத்தப்படுவார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பிரேமதாஸா அரசில் அமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்னர் சிறிசேன கூரே ஐ. தே. கவின் சார்பில் கொழும்பு மேயராகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# அம்பாந்தோட்டைக்கு சஜித் பாததும்பறைக்கு நவீன்

### அமைப்பாளர்களாக நியமனம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸாவை அம்பாந்தோட்டை தொகுதி அமைப்பாளராகவும்—

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான காமினி திஸநாயக்காவின் மகனை நவீன் திஸநாயக்காவை பாததும்பறைத் தொகுதி அமைப்பாளராகவும்—

ஐக்கிய தேசியக்கட்சி நியமித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. (உ)

### மட்டக்களப்புப் பகுதியில்

# மூளைக் காய்ச்சல் பரவ பன்றி இறைச்சி காரணம்!

கொழும்பு, ஜன. 25

மட்டக்களப்பில் தீவிரமாகப் பரவி வரும் மூளைக் காய்ச்சல் நோய்க்கு பன்றி இறைச்சிப் பாவனையும் காரணம் என சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கடந்த ஒன்றரை மாத காலத்துக்குள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவி வரும் மூளைக் காய்ச்சல் நோய் காரணமாக 15 பேர் வரை பலியாகியிருப்பதும் —

இந் நோயால் பீடிக்கப்பட்ட — நூறுக்கும் அதிகமானோர் — மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் தெரிந்தவையே. (ஐ-உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

செல்வன்

## கணேசன் இலங்கேஸ்வரன்

[யாழ். மத்திய கல்லூரி மாணவன்].

பூநகரியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் இலங்கேஸ்வரன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) நேற்று (24-01-1995) அகாலமரணமானார்.

இவர் திரு. திருமதி கணேசன் (ஓய்வு பெற்ற நூல் நிலையப் பொறுப்பாளர், பிரதேச சபை பூநகரி) அவர்களின் அருமை மகனும், செல்வன் கம்சநாதன், (ஆசிரியர் சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) செல்வி. பாலரதி (மாவட்ட காணிப்பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), செல்வன் சிறிகரன், செல்வி மாலதி, செல்வி உசாநந்தினி (திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு. திருமதி. நா. பாலசுப்பிரமணியம், திரு திருமதி. மு. க. சிவபாதம், திரு. திருமதி. க. செல்வராசா, க. ஜெயகுணதிலகம் ஆகியோரின் அன்புக்கினிய பெறாமகனும், யோகராசா லலிதாம்பிகை தம்பதிகள், அருள்சாமி நாகேஸ்வரி தம்பதிகள் ஆகியோரின் அருமை மருமகனும், காலம் சென்ற இராமலிங்கம் செட்டியார், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகள் (கன்னாதிட்டி), முத்துவேலு கணபதிப்பிள்ளை (பூநகரி) ஆகியோரின் பேரனும், காலம் சென்ற சிவபாதம் சேந்தினியின், சகோதரனும், செல்வி சந்திரிகா, செல்வி மேனகா, செல்வி மேலோசினி, செல்வன் கமலேந்திரா ஆகியோரின் சகோதரனும், திருமதி காமாட்சியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1995-01-25) பி. ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மு. க. சிவபாதம்

2 3/1, நாலாம்குறுக்குத் தெரு
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம். (34839)

## பொன்னையா பாலச்சந்திரன்

[முன்னாள் Pegasusreef Hotel கணக்காய்வாளர்]

3 ஆம் கட்டை, கல்வியங்காட்டைச் சேர்ந்த பொன்னையா பாலச்சந்திரன் கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் பொன்னையாவினதும் - இளைப்பாறிய சிரேஷ்ட போதனாசிரியர் (நெசவு) பாக்கியலட்சுமியினதும் அன்புமகனும், நளினாவின் (கனடா) அன்புக் கணவரும், கோபிநாத்தின் (கனடா) பாசமிகு தந்தையும், பாலலோஜினி, பாலசவுந்தரி, பாலதேவி ஆகியோரின் சகோதரரும், சிவபாதசுந்தரம் (இளைப்பாறிய தபால் அதிபர்), கோணேந்திரன் (நிர்வாக அலுவலர்), விக்கினேஸ்வரன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும், இளைப்பாறிய அதிபர் பொன்னம்பலம், இளைப்பாறிய ஆசிரியை இராசம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் பெறாமகனும், கனகரத்தினம் செல்லம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாய்

குளுக்கண்டி 'லன்,
கட்டப்பிராய் (34843)

## மு. சு. அலோஷியஸ்

(இளைப்பாறிய ஆசிரியர்)

சில்லாலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் மு.சு. அலோஷியஸ் நேற்று காலமானார்.

அன்னார் ஆன் கிறேசின் அன்புக் கணவரும், பற்றிமாராணி, ஜெனிற்றா (பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கம்), வனிதா, தேவதாஸ் [நில அளவைத் திணைக்களம், புத்தளம்], யஸ்ரின் [வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்], பற்றி [நியூசிலாந்து], சந்திரன் (புத்தளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிறெட் நல்லையா, யோகம், விமலா, தேவதாசன் [நியூசிலாந்து[ ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [25 - 01 - 1995] பிற்பகல் 3 மணிக்கு அவரின் சில்லாலை இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் சில்லாலைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யஸ்ரின் (வேந்தன்)
[மகன்]

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு. [34848]

## முருகேசு சுப்பையா [லொறி]

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த முருகேசு சுப்பையா [லொறி] அவர்கள் 24-01-1995 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, கனகசுந்தரம் (லொறி உரிமையாளர்), பாலசுந்தரம் [சுப்பையா லொறி உரிமையாளர்], புவனேஸ்வரி, நாகராசா [சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை], காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், இரத்தினேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, மனோன்மணி, விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம், தனலட்சுமி [ஆசிரியை துரையப்பா ம வி. கொழும்புத்துறை], சரோஜாமலர், சிவசுப்பிரமணியம், பாலநாத் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (25-1-1995) புதன் காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு பகல் 10-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
பிள்ளைகள்

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில். [34849]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# போர் இடை நிறுத்தம் திருப்திகரமாக அனுஷ்டிப்பு!

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன. 25

அரசப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த இடைநிறுத்தம் திருப்திகரமான முறையில் — எந்த அசம்பாவிதமுமின்றி — கடந்த 8 ஆம் திகதி முதல் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கொழும்புப் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் வானொலித் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் —

ஏற்படக்கூடிய எந்தவித மான பிரச்சினைகளுக்கும் இதன்மூலம் தீர்வு காணமுடியும் என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [உ]

## பி. பி. ஸி. செய்தியாளர்கள் விடுதலை

மணிலா, ஜன. 25

புத்தர் சிலையில் இருந்து படம் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்ட இரு பி.பி.ஸி. செய்தியாளர்களும் நேற்று நீதிமன்ற வழக்கில் இருந்து விடுவிக்கப் பட்டார்கள்.

(முன்வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

[இ-3]

## துப்பாக்கியால் சுட்டு சிப்பாய் தற்கொலை

கொழும்பு,ஜன.25

வவுனியாவில் இராணுவ சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத்தற்கொலை செய்துகொண்டார்.

இராணுவத்தில் வேலை செய்வது கடினம் என கடிதம் எழுதி வைத்துவிட்டு அச்சிப்பாய் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் இராணுவத்தின் சிங்க படைப்பிரிவை சேர்ந்தவராவார். (இ-3)

## விளையாட்டு நிகழ்வு

ராஜன் விக்ரம் சுற்றுக் கிண்ணத்துக்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;-

பிற்பகல் 1. 00 மணி — உதயன் வி. க. அணி எதிர் கே. சி. சி. சி. அணி. (ஒ-20)

## கப்பலிலிருந்து மா இறக்குவது இடைநிறுத்தம்

வடமராட்சி, ஜன. 25

நிவாரணப் பொருள்களை விரைவாக இறக்கி முடிப்பதற்காக நேற்று முதல் கோமாரிக் கப்பலில் இருந்து மட்டும் பொருள்கள் இறக்கப்படுகின்றன.

ஹபரண கப்பல் மாவுடன் காங்கேசன்துறையில் தரித்து நிற்கிறது.

நாளை வியாழக்கிழமை கோமாரியிலிருந்து பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்டு விடும் என்றும் அதன் பின்னரே ஹபரணயிலிருந்துமிகுதியாக உள்ள மா இறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தனியாருக்கான பொருள்களுடன் "குமண" கப்பல் கொழும்பு துறைமுகத்தில் இருந்து எதிர்வரும் சனிக்கிழமை வடபகுதி நோக்கிப் புறப்படவிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [இ-4-173)

## நான்கு கை குழந்தை!

பொலன்னறுவ, ஜன 25

பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் கடந்த சனிக்கிழமை நான்கு கைகளும், நான்கு கால்களும் கொண்ட அதிசய பெண் குழந்தை ஒ று பிறந்தது.

எனினும் அந்த அதிசயச் சிசு பிறந்த சில நிமிடங்களில் இறந்து விட்டது. இலட்சத்தில் ஒரு குழந்தையே இப்படி அபூர்வமாகப் பிறப்பதுண்டு — என்று பொலன்னறுவ ஆஸ்பத்திரி பெண்ணியல் நோய் நிபுணர் டாக்டர் தர்ஷனா வீரசேனா தெரிவித்தார். [அ]

## பச்சிலைப்பள்ளி திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 25

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக திறப்பு விழா இன்று புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. ( இ-117)

## வடக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

'யுக்திய' தெரிவிக்கிறது.

இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக அரசு ஓர் அரசியல் தீர்வை முன் வைத்தாலும் குறிப்பாக அதை வட பகுதியில் செயற்படுத்துவது ஒரு கடினமான விடயமாகவே இருக்கும் என்பது இந்த யோசனையை முன் வைத்துள்ளோருடைய கருத்தாகும்.

இம்மாகாணத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்து தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூட அரசுக்கு குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது தேவைப்படும் என்றும் 'யுக்திய' தெரிவிக்கிறது.

உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி வட பகுதியின் நிர்வாகம் தொடர்பாக தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அதில் பங்கு கொள்வதில்லையென முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன என்றும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-10)

## இராணுவத்தின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூறியுள்ளனராம்.

இதேவேளை —

பூநகரி முகாமை அகற்றுவது உட்பட விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக அரசிற்குத் தோன்றியுள்ள பிரச்சினையும் —

இவ்விடயங்கள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் அரசின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதாலும் —

இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாகவும் ''ஹிரு'' தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தற்போதைய கோரிக்கைகளை அரசு எவ்விதத்திலேனும் நிறைவேற்றிவைப்பினும், இனிமேல் விடுக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவது கடினமாய் அமையுமென அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டி உள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (அ-10)

## 31 வருடங்கள் வாழ்ந்து சாதனை புரிந்த மான்!

### கடந்த ஞாயிறன்று இறந்துவிட்டது!

புதுடில்லி,ஜன 25

உலகிலேயே மிக நீண்ட காலம் உயிர்வாழ்ந்து சாதனை புரிந்த மான் ஒன்று கடந்த ஞாயிறன்று ஸ்கொட்லண்டில் தனது31 ஆவது வயதில் இறந்துவிட்டது.

சாதாரணமான்களின்சராசரி ஆயுள்காலம் 15 ஆண்டுகளாகும்.

உலகில் மிக அதிககாலம் உயிர் வாழ்ந்ததுஎன்பதற்காக கடந்த 1989 ஆம் ஆண்டில் இந்த மான் உலக சாதனைப் புத்தகமான ''கின்னஸ்''ஸில் இடம்பெற்றிருந்தது. (ஐ)

JAFFNA COLLEGE CEYLON

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

க.பொ.த. (உயர்தரம்) - 95 ஆகஸ்ட்

துரித மீட்டல் பயிற்சி நெறி

கிழமை நாட்களில் காலை 8-45 மணிமுதல் பிற்பகல் 1-15 மணிவரை வகுப்புக்கள் அனுபவம் பெற்ற பிரபல ஆசிரியர் குழுவால் நடத்தப்படும். வினா - விடைகளும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படுவதோடு, செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படும்.

மிகச்சொற்ப அளவிலான மாணவர்களே வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவர். விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பெறுபேறுகளுடன் 31-01-1995 செவ்வாய்க்கிழமைக்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

பாடங்கள்

பௌதிகவியல் — இரசாயனவியல்
தூய கணிதம் — பிரயோக கணிதம்
விலங்கியல் — தாவரவியல்
கிறீஸ்தவம்

விண்ணப்பித்தவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு பாடத்திற்கு மாதக் கட்டணம் ரூபா 50 ஆக பெறப்படும்.

ஆங்கில, ஆங்கில இலக்கிய வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

( இதற்குரிய மாதக்கட்டணம் ரூபா 125 )

(சி-317) இயக்குநர்.

## இனப்பிரச்சினை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிடைப்பதற்கு வழிவகை செய்தல் வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் சுயாட்சி உள்ளமைப்பு வழங்கப்பட வேண்டும்.

இச்சுயாட்சி உள்ளமைப்புடன் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் ஏனைய பிரதேசங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

வடக்கு — கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களுக்கு உள்ளது போன்ற நிலை வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு இருக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறியுள்ளபர். (இ-3)

## யாழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுத்தாபன தென்னாசிய பிரிவு செய்தியாளர் கோர்ட்டன் ரெயினர்—

இன்டிப்பென்டன் பத்திரிகை தென்னாசிய செய்தியாளர் ரிம் பிக்கின்—

த டெய்லி ரெலி கிராப் செய்தியாளர் பிலிப்சேர்வில்—

ஆகியோரே இச்செய்தியாளர்கள் ஆவர்.

இவர்கள் நேற்று யாழ். நகரப்பகுதியை பார்வையிட்டனர். (இ-3)

## விக்ரோறியா கல்லூரியில் கலைவிழா

சுழிபுரம், ஜன. 25

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் கலை விழா இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

இந்த கலைவிழா கடந்த 15 ஆம் திகதி நடைபெற இருந்ததும் மழை காரணமாக இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-28)

# மரண அறிவித்தல்கள்

## பிலுப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை

(இளைப்பாறிய கத்தோலிக்க அச்சக அச்சுக் கோப்பாளர்)

பிலுப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை 22 - 01 - 95 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற றோசாவின் அன்புக் கணவரும்,யேசுதாசன், மரியதாஸ், G. J. கிளறன்ரன் (ரஞ்சன் — போதகர் இரட்சிப்பின் சத்தம் கொழும்பு), றோகினி, திறேஷியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் அன்ரன் சந்தியாப்பிள்ளையின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25 - 01 - 1995) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பிற்பகல் 3.30 மணியளவில் புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, பின்பு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் அன்ரன்

40, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (34846)

## காசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

[ஓய்வுபெற்ற வைத்தியசாலை பரிசாரகர்]

குப்பிளான் தெற்கு காசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை 24 - 1 - 95 இல் காலமானார்.

இவர் காலம்சென்ற காசிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலம்சென்ற நமசிவாயம் தம்பதியரின் மருமகனும், காலம்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், அம்பிகாதேவி, காலம் சென்ற யோகராணி, சிவபாக்கியம், செல்வமலர் [இத்தாலி], தவராசா [இத்தாலி], நிமலாதேவி [சுவிஸ்], ஜெயராசா [சுவிஸ்], இந்திராணி [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வினாயகமூர்த்தி, பாலசிங்கம், வடிவேலு, சுகுமார் [இத்தாலி], விக்கினேஸ்வரமூர்த்தி [சுவிஸ்], ராசா [சுவிஸ்], குமுதினி, சாந்தி [இத்தாலி] ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜிதா, சுகிர்தா, ரதீஸ், சிறீகாந், கயல்விழி, ஜெயரூபன் சுசீபன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவக்கொழுந்து, உமாதேவி, இரத்தினம்மாவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் குப்பிளான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல் :
வ. விநாயகமூர்த்தி
[மருமகன்]

குப்பிளான் தெற்கு. [34850]

## கந்தையா கார்த்திகேசு

(சிவகுரு)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 15/4, குளப்பிட்டி லேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கார்த்திகேசு (சிவகுரு) 24-01-1995 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - காமாட்சி அவர்களின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் பாசமிகு கணவரும், இரதிதேவி, இரஞ்சினிதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற இரத்தினராசா, காலஞ்சென்ற இராதாதேவி மற்றும் சிவனேசராசா (ரகு) - (கஜமுகன் பென்னி ஹவுஸ் - கிளிநொச்சி), ஸ்ரீகாந்தராசா (பிரான்ஸ்), மனோகரராசா (கனடா), பாஸ்கரராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணமாலை (பாலவிநாயகர் ரேடர்ஸ் - கிளிநொச்சி), திருஞானலிங்கம் (சுவிஸ்), சந்திரதாசன் (ஜேர்மனி)கமலேஸ்வரி, சீலா (பிரான்ஸ்), அன்பரசி (கனடா), வசந்தமாலா (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷா (சிங்கப்பூர்), பாலகிருஷ்ணன் ( சிங்கப்பூர் ) கிருபாகரன் (பிரான்ஸ்), சசிதரன், மீரா, ரமேஸ் (சுவிஸ்), ரஜனி (சுவிஸ்), ரமணன் (சுவிஸ்), ரத்திகா (சுவிஸ்), லமித்தா, கார்த்திகா, சுகன்யா, நிரோசன்(பிரான்ஸ்), நிரோசா (பிரான்ஸ்), நீரோ பிரான்ஸ் ), அனுப்பிரியன் (கனடா), ஜெனீபன் (கனடா), பாதுஷா (சுவிஸ்) ஆகியோரின் பிரியத்திற்குரிய பேரனாரும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணிப்பிள்ளை. சின்னத்தங்கம், நடராசா, பொன்னம்மா, பொன்னு ஆகியோரின் அன்பு சகோதரரும், நல்லதங்கம், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, இராசையா, கோவிந்தன்,காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் நடராசா, திருநாவுக்கரசு மற்றும் நல்லம்மா, அருளம்மா, செல்வமணி, சாந்தமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 - 01 - 1995 வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கா. சிவநேசராசா [ரகு]
(மகன்)

15/04, குளப்பிட்டி லேன்,
கொக்குவில் கிழக்கு. (34847)

## செல்லையா கனகசபை

[துரைசிங்கம்]

(காமினி லொறி உரிமையாளர்)

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இல 389 இல் வசித்துவந்த செல்லையா கனகசபை [துரைசிங்கம் - காமினி லொறி உரிமையாளர்] நேற்று மாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று [25-01-1995] பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
செ. ரகுபாலன்
[பெறாமகன்]

389, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [34851]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org